பிசுமில்லாகி.

இஃது.

மெய்ஞ்ஞான சொரூபராகிய தக்கலைப்
பீருமுகம்மது சாகிபு
அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய
ஞானரத்தினக்குறவஞ்சி.

கனம்பொருந்திய
செய்யிதைதுறாசு நயினூர் மரைக்காயர்
அவர்கள் குமாரர்
ள - ள - ஸ்ரீ
கி. செய்யிது முகம்மது
மரைக்காயரவர்கள்
முன்பதிப்பித்தபிரதிக்கிணங்க

புரசைபாக்கம்.
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பார்த்திப வரு

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்

ஞானரத்தினக் குறவஞ்சி.

காப்பு.

பொன்னுலகு பொருந்துமனுப் பொருளறியத்தலமறிய, யின்னுலகில்மெய்ஞ்ஞானம்விளக்குகுறவஞ்சிதனை, உன்னுமத்தன்னினைவி லுன்னியுதிப்பொருளாங்காய்த். தன்னிறைநிறைத்தன் னினைவாய்த்தரிப்பதுவேகாப்பாமே.

ஆதிக்குமுன்னமநாதியுமென்னடி சிங்கி
அந்தக்கருக்குழிமுந்தவிருளறை சிங்கா
ஆதியாவந்தவருய்ப்பொருளேதடி சிங்கி
சோதியிலாதிசொரூபமெழுந்தது சிங்கா
சோதியிலாதிசொரூபானதெப்படி சிங்கி
வேதமாய்ப்பூட்பொருளொன்றாய்முடிந்தது சிங்கா
பூப்பொருளென்றுநீயுஞ்சொன்னதாரடி சிங்கி
ஆ, அப்பனுமாயியுமாசையால்நாமடா சிங்கா
எப்படியுலகத்திலிப்படியுருவானோம் சிங்கி
அப்பன்தன்னட்புக்குவொப்பியதாயாலே சிங்கா
பராபரத்திற்பஞ்சவன்னமேது சிங்கி
வொரசித்தானவிந்துநிறமடா சிங்கா
ஒன்றுக்குளைவர்களுண்டானதெப்படி சிங்கி
வொன்றேடேயொன்றாக் கோதுமினைந்தது சிங்கா

மூலக்குகைக்குள்ளேமுச்சுடரேதடிசிங்கி ௮
நாதத்திலெம்பூதமண்டாயுதித்ததுசிங்கா அ
மூலக்குகையென்னுங் கோட்டைக் காசரியார்சிங்கி
அது, முப்பொருளொன்றாய்முடித்ததினைவெடாசி
ங்கா, மூலக்கிழங்குருளைத்திடமெவ்விடஞ்சிங்கி ௯
நாதத்திலானநடுநிலையல்லவோசிங்கா ௰
முன்னேமுளையாய் முளைத்திட மெவ்விடஞ்சிங்கிஅ
து, மூளைமுளையிருகண்ணிதழல்லவோசிங்கா ௰௧
பின்னேயுருவாய்முடிந்திடமெவ்விடஞ்சிங்கி அது
பெண்ணாணுமாகப்பிறந்ததலமடாசிங்கா ௰௨

இந்தவுடலுக்குவேரென்னதூரென்னசிங்கி அது
இந்தஉடலுக்குவேராதிமூலமேசிங்கா ௰௩
இந்தஉடலுக்குயிர்வந்ததெப்படிசிங்கி அது
தொந்திதடுக்குழிதொப்பூழ்வழியடாசிங்கா ௰௪
இந்தஉடலுக்குயிரெங்கேநின்றதுசிங்கி அது
அந்தரமாயண்டமாக்கொடிநின்றதுசிங்கா ௰௫
இந்தஉடற்கனியெந்தக்கொடிக்கனிசிங்கி அது
முந்தியதொப்பூழுமாக்கொடியல்லவோசிங்கா ௰௬
மாக்கொடியென்பதை மானிடரென்சொன்னார் சிங்
கி அது, மட்டிலடங்காதமாகலிமாவடாசிங்கா ௰௭
எந்தவழிபிறந்துவந்தோமுலகினிற்சிங்கி அது

வெல்லாமுடிந்தபொருள்வழியாவெடா சிங்கா ௰௮
முன்னையறிவாலறிவகையென்னடி சிங்கி அது
முச்சுடர்மூன்றுமுடனுப்பிரகாத்துமாச் சிங்கா ௰௯
பின்னையறிவாகவொன்றனதெப்படி சிங்கி அது
பேதசமற்றபெருவெளியானது சிங்கா ௨௰
ஆசைகொண்டுதம்மையாட்டுறதாரடி சிங்கி அது
அக்கினிவாயுநீர்மண்ணின்மகிமையே சிங்கா ௨௧
ஆசைபாசபலனுமேபோகமாரடி சிங்கி அது
அங்கம்பொருந்திப்பங்குமண்ணல்லவோ சிங்கா ௨௨
தன்னையறியுந்தலமேது சொல்லடி சிங்கி யிரு
கண்ணிடையான நடுநிலையல்லவோ சிங்கா ௨௩
என்னவிதமாகத்தன்னையறிவது சிங்கி அது
தன்னவன்றாய்த்தந்தையாகிநாமானது சிங்கா ௨௪
இறையையறிவதெப்படிச்சொல்லடி சிங்கி
இறையெங்கு நின்றுடுந் தன்னினைவாகுமே சிங்கா
தன்னுள்வணங்குந்தலமென்ன சொல்லடி சிங்கி நீ
தன்னைமறந்ததவத்திலிருப்பது சிங்கா ௨௫
என்னவிதமாகத்தன்னைமறப்பது சிங்கி நீ
யொன்றைப்பொருந்தி யொடுங்கியிருப்பது சிங்கா
என்னவிதமாகவொன்றைப் பொருந்தலாம் சிங்கி அ
து, எல்லாமறந்துயிருளாயிருப்பது சிங்கா ௨௬
என்றென்றுசொன்னவுயிர்நிலையென்னடி சிங்கி அது

உன்றனுதிப்பலமுன்றனில் நினைவடா சிங்கா ௫௰
கன்னியெழுந்து கலந்திடமெவ்விடஞ் சிங்கி சிவ
மூன்னியெழுந்தவுயிர் நிலையல்லவோ சிங்கா ௫௧
எங்கும்பரந்தபெரும்பொருளென்னடி சிங்கி அது
அங்கிங்குமெங்குங்கண்டபெருவெளி சிங்கா ௫௨
அண்ணினுமென்னுமழியாப்பொருளென்ன சிங்கி
யிரு, கண்ணையுமூடவிருளழியாப் பொருள் சிங்கா
ஆங்காரவுடலுக்கு ஆணிதானென்னடி சிங்கி அது
ஓங்காரமூலத்தினுள்ளொளியல்லவோ சிங்கா ௫௩
ஞானியாய்வந்தவரும்பொருளென்னடி சிங்கி முன்
தோணிபசங்குருமூதனும்மல்லவோ சிங்கா ௫௪
இந்தப்பொருள்வந்தவெந்தவழியடி சிங்கி அது
அந்தச்சதிர்மதிவந்தவழிபடா சிங்கா ௫௫
கத்தனொளிவுகலந்திடமெவ்விடம் சிங்கி வழி
யத்தநடனர்தானடியதற்பரஞ் சிங்கா ௫௬
உத்தபொருளுக்குயிரென்னடி சிங்கி இறை
சித்திருந்தாடுந்திருவடியல்லவோ சிங்கா ௫௭
உச்சிதவெள்ளவுயிரெழுத்தென்னடி சிங்கி அது
நச்சரவாடுநடுநிலையல்லவோ சிங்கா ௫௮
எட்டெழுத்தாகவெழுந்தெழுத்தென்னடி சிங்கி அது
மட்டிலடங்காவடிவட்டகோணமே சிங்கா ௫௯
அஞ்செழுத்தாகவனைந்தெழுத்தென்னடி சிங்கி அது

அஞ்சும்பொருந்திய ஆகாயவட்டமேசிங்கா ௬௰
அண்டபத்தோராட்சரமறிய நீசொல்லடி சிங்கி அது
வஞ்சமகாரநடுச்சுழிமூன்றுமே சிங்கா ௬௧
கற்பகவாசிகலந்திடமெவ்விடஞ் சிங்கி அது
உற்பனமூலத்திலுள்ளொளிவல்லவோ சிங்கா ௬௨
சத்தம்பிறந்திடுஞ்சற்குருவேதடி சிங்கி அது
உற்றசுவாசமுயிர்நிலையல்லவோ சிங்கா ௬௩
கண்டுதொழுஞ்சிவகாரணமேதடி சிங்கி நம்மை
யுண்டுபடுத்தியவுள்ளொளிவானதே சிங்கா ௬௪
எப்படிக்கண்டுபிறையைவணங்கலாம் சிங்கி அது
நட்புடன்ரண்டுநடுநிலைகாண்பது சிங்கா ௬௫
நடுநிலையானதை நாடுறதெப்படி சிங்கி - அது - நாட்
டத்தேட்டமோட்ட மாட்டமொன்றாகில் சிங்கா
தேட்டமுநாலுந்திருந்துறதெப்படி சிங்கி நீ
திருவைப் பொருந்தியொரு யித்திருப்பதே சிங்கா
ஒருமித்திருக்கின்றவோரிடமெவ்விடம் சிங்கி அது
வொன்றுமிரவும்பகலுமுதிப்பிடம் சிங்கா ௬௮
இரவும்பகலுமொன்றானதுஎவ்விடஞ் சிங்கி அது
யெப்போதிருள்யிருப்பதுவூனமே சிங்கா ௬௯
இரவும்பகலும்பிறப்பிடமெவ்விடம் சிங்கி அது
யிருளிலுதித்தன்னிவந்ததடி மூலம் சிங்கா ௭௰
இரவும்பகலுமெழுந்திடமெவ்விடம் சிங்கி அது

யேகாந்தஉன்னால்வந்தேறியதாமரைசிங்கா ௫௧
இரவும்பகலும்பிரித்திடமெவ்விடஞ்சிங்கி அது
யெழுந்தறுகோணமிடம்வலம்வாசியேசிங்கா ௫௨
இரவும்பகலுநின்றாடியதெவ்விடஞ்சிங்கி அது
யெழுந்துநின்றாடுஞ்சுழிமுனைமண்டலஞ்சிங்கா ௫௩
இரவும்பகலுமிருப்பிடமெவ்விடஞ்சிங்கி அது
பேராறுமோடியவோராணநான்கடா சிங்கா ௫௪
இரவும்பகலுமுதிப்பிடமெவ்விடஞ்சிங்கி அது
வேறுமெட்டங்குலமிருவிழிநடுநிலைசிங்கா ௫௫
இரவும்பகலென்றுமென்னத்தைச்சொல்லலாஞ்சிங்
கி அது யிரவுபகலிடபிங்கலைவாசியேசிங்கா ௫௬
இடகலைபிங்கலையென்னத்தைச்சொல்லலாஞ் சிங்கி
அது இடகலைச்சந்திரன்பிங்கலைசூரியன்சிங்கா ௫௭
யென்னத்தைச்சொல்லலாஞ்சந்திரன்சூரியன்சிங்கி-அ
து-இடவலமாகவெழுந்தோடுமூச்சடா சிங்கா ௫௮
சந்திரன்சூரியனென்றனதெவ்விடம்சிங்கி சகல
கலையுட்பொருந்துநடுச்சுழிமுனையேசிங்கா ௫௯
என்னத்திலேபாரேறிநின்றதுசிங்கி அது
உன்னுக்குள்வாசிநடனப்புரவிமேற்சிங்கா ௬௰
என்னவிதமாகவெடுத்துநின்றாடலாஞ்சிங்கி அது
வற்றவுமாற்றவுமிணங்கிநின்றாடிப்பார்சிங்கா ௬௧
மாற்றிப்பிடிக்கமருத்தென்னசொல்லுசிங்கி அது

மாளாமல்மாண்டுமறந்திருப்பதேசிங்கா ௪௨
அட்டகெஜங்களறிந்தடமெவ்விடம்சிங்கி ௪௩
எட்டுவிதமரமெழுதும்பலனடாசிங்கா ௪௪
உற்றஞானப்பொருளுந்தியாய்ச்சொன்னதார்சிங்கி
௪௫ உத்தமர்பீருமுகம்மதுரைத்ததுசிங்கா ௪௬

ஞானரத்தினக்குறவஞ்சி முற்றிற்று.

ஆசிரியவிருத்தம்.

வள்ளலிறசூலுரைத்தவழிமுறைபோல்
நிறைஞோர்கள்மகிழ்ந்திட்டேற
வெள்ளலில்லாவழிநான்கினியல்பான
சரீஅத்தென்றின்புற்றேறுங்குருந்
தெள்ளமுத்தரீக்கத்தக்கீகத்து
மகுரிபத்துத்தெளிவாய்நான்கு
முள்ளடக்கிக்குறவஞ்சியெனவுரைத்
தார்பீர்முகம்மதென்னுங்கொண்டல்

இங்ஙனம்,
யாழ்ப்பாணம்,
பரிகாரிமரைக்காயர்குமாரர்
பக்கீர்முகிய்யித்தீன்புலவர்.